பெருந்தொகை அந்நிய செலாவணியைத் தரும்
'சோ ஸ்ரீலங்கா அயன்மேன் 70.3 ட்ரைஅத்லன்'

[illegible]

வெளிநாட்டவர்களுக்கு ஒரு சிறந்த சுற்றுலாத்துறை மையமாக இலங்கை விளங்குகின்றது என்பதை மீண்டும் எடுத்துரைக்கும் வகையில் இரண்டாவது தொடர்ச்சியான வருடமாக சோ ஸ்ரீலங்கா அயன்மேன் 70.3 ட்ரை-அத்லன் போட்டி நிகழ்ச்சியை இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு பணியகம் நடத்துகின்றது. இதன் மூலம் இலங்கைக்கு சுமார் 4 மில்லியன் டொலர்கள் வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1.9 கிலோ மீற்றர் தூர கடல் நீச்சல், 90 கிலோ மீற்றர் தூர சைக்கிளோட்டம், 21.1 கிலோ மீற்றர் தூர ஓட்டம் ஆகிய மூன்று நிகழ்ச்சிகளைக் கொண்ட சோ ஸ்ரீலங்கா அயன்மேன் 70.3 ட்ரை-அத்லன் போட்டி நிகழ்ச்சியில் 56 நாடுகளைச் சேர்ந்த 700க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றுகின்றனர். இப்போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி கொழும்பு காலிமுக கடற்கரையில் ஆரம்பமாகவுள்ளது.

2018 இல் நடைபெற்ற அங்குரார்ப்பண சோ ஸ்ரீலங்கா அயன்மேன் 70.3 ட்ரை-அத்லன் நிகழ்ச்சியில் 60 நாடுகளைச் சேர்ந்த 800 போட்டியாளர்கள் பங்குபற்றியதுடன் அப்போட்டியாளர்களுடன் அவர்களது குடும்பங்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அடங்கலாக சுமார் 4,000 பேர் இலங்கைக்கு வருகை தந்தனர். இதன் மூலம் இலங்கை ஒரு சிறந்த சுற்றுலாத்துறை மையம் என்பது உறுதிசெய்யப்பட்டதுடன் பெறுமதிவாய்ந்த அந்நிய செலாவணி இலங்கைக்கு வருமானமாக கிடைத்தது.

இவ் வருடம் சுமார் 4 மில்லியன் டொலர்கள் (சுமார் 72 கோடி ரூபா) அந்நிய செலாவணியாக கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பு காலிமுக கடற்கரையில் 1.9 கிலோ மீற்றர் நீச்சல் போட்டியுடன் காலையில் ஆரம்பமாகும் ட்ரை-அத்லன் போட்டியில் இரண்டாவது நிகழ்ச்சியாக 90 கிலோ மீற்றர் தூர சைக்கிளோட்டப் போட்டி நடைபெறும். அதனைத் தொடர்ந்து 21.1 கிலோ மீற்றர் தூர ஓட்டப் போட்டி நடைபெறும். இந்த மூன்று போட்டிகளும் தொடர்ச்சியாக இடம்பெறும்.

56 நாடுகளிலிருந்து 700க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள்

INTERNATIONAL TRIATHLON & EXHI
21ST - 24TH FEBRUARY 201
IRONMAN
70.3

[illegible] சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு [illegible]

சோ ஸ்ரீலங்கா அயன்மேன் 70.3 ட்ரை-அத்லன் போட்டி தொடர்பாக [illegible] நடந்த ஊடக சந்திப்பில் பேசிய சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு, வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க, இத்தகைய போட்டி

நிகழ்ச்சியானது இலங்கையின் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க வழி வகுப்பதுடன், போட்டியாளர்களை [illegible] என்றார்.

இதேபோன்று சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கக்கூடிய இன்னும் பல நிகழ்ச்சிகளை இவ் வருடம் [illegible] அமைச்சர் குறிப்பிட்டார்.

ஊடக சந்திப்பில் கருத்துரைத்த இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு பணியக [illegible] அயன்மேன் 70.3 நிகழ்ச்சி வெற்றிகரமாக [illegible] இவ் வருடப்போட்டியானது வெளிநாட்டவர்களுக்கு ஒரு சிறந்த [illegible] சுற்றுலாத்துறை மையமாக இலங்கை [illegible] என்றார்.

சோ ஸ்ரீலங்கா அயன்மேன் 70.3 ட்ரை-அத்லன் நிகழ்ச்சியில் இந்தியா, [illegible] அவுஸ்திரேலியா, [illegible] ஆகிய 6 பிரதான நாடுகளின் போட்டியாளர்கள் பங்குபற்ற [illegible]

அயன்மேன் [illegible] நிகழ்ச்சியை [illegible] வெற்றிகரமாக நடத்தியதன் மூலம் வெளிநாட்டவர்களின் பாராட்டைப் பெற்றோம் [illegible] இலங்கையில் [illegible] போட்டியாளர்கள் [illegible] அயன்மேன் [illegible] நிகழ்ச்சி [illegible] எனத் தெரிவித்தார்.